# The Buildings Which Reveal the Selected Islamic Architectural Tradition: A Study Based on Sammanthurai

# தேர்ந்தெடுக்கப்பட்ட இஸ்லாமியக்கட்டிடக்கலை மரபை வெளிப்படுத்தும் கட்டிடங்கள்: சம்மாந்துறையை மையப்படுத்திய ஆய்வு

[1]Achchi Mohamed Inun Jariya and [2]Mohamed Thamby Muhamed Hassan

**[1]Seniour Lecturer in Accountancy, Department of Accountancy & Finance, Faculty of Management & Commerce, South Eastern University of Sri Lanka. jariyaam@seu.ac.lk**

**[2]BFA In Visual and Technological Arts, Eastern University Sri Lanka. 9395hassanmuhamed@gmail.com**

**ஆய்வுச் சுருக்கம் :** இஸ்லாமிய கலைகள், நாகரீகம் மற்றும் பண்பாடு அனைத்தும் ஊற்றெடுக்கும் மத்தியஸ்தலமாக புனித பள்ளிவாசலையே முஸ்லிம்கள் மதிக்கின்றனர். இதனைத் தொடர்ந்து தமது தேவைக்கான அளவு, அமைப்பில் வேறுபட்டதாகவும் பிறநாகரீகங்களில் இருந்து பெற்றுக் கொண்ட பண்பாடுகளின் அடிப்படையிலும் கவர்ச்சியான பள்ளிவாசல்கள், மாளிகைகள் என இஸ்லாமியக் கட்டிடக்கலை தனியான மரபுகளுடன் வளர்ச்சி கண்டு வந்தது. இலங்கையில் அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை பிரதேசமானது பெரும்பான்மை முஸ்லிம்களுள் வாழுகின்ற ஒரு பிரதேசமாகும். இங்கு காணப்படும் பாரம்பரிய இஸ்லாமியக் கட்டிடங்கள் அனைத்தும் அவை தொடர்பான தகவல்கள் மற்றும் அவற்றின் அழகியல் வெளிப்பாடுகள் போன்ற ஆவணங்கள் இன்மையினால் இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வின் பிரதான நோக்கமாக சம்மாந்துறையின் முஸ்லிம் பிரதேசத்தில் வெளிப்படுத்தப்படும் கட்டிடங்களான பள்ளிவாயல்கள், சியாரக்கட்டிட அமைப்புக்களில் இஸ்லாமிய கட்டடிடக்கலை மரபுகள் எவ்வாறு தாக்கம் செலுத்தியிருக்கின்றன என்பதை அறிவதடன் அவற்றில் எவ்வாறான இஸ்லாமிய கட்டிடக்கலை மரபுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலும் அக்கட்டிடங்களில் எவ்வாறான அழகியற்கலை வெளிப்பாடுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பன தொடர்பிலும் ஆராய்வது இவ்வாய்வின் நோக்கமாகக் கொள்ளப்படுகின்றது. ஆய்வு முறையியலில் ஆய்வினை திறன்பட செய்து முடிக்க ஆய்வுடன் தொடர்புடைய தரவுகள் இன்றியமையாததாகும். இவ்வாய்வினை சீராக செய்வதற்கு முதலாம் நிலைத் தரவுகள் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் பயன்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். முதலாம் நிலைத்தரவுகளாக நேரடி அவதானிப்பு, நேர்காணல் முறைகள் மூலமாக தரவுகள் பெறப்பட்டுள்ளன. இப்பிரதேசம் தொடர்பாக நன்கு அனுபவமுடையவர்கள் சிலருடனும் நேர்காணல் மேற்கொள்ளப்பட்டது. நேர்காணல் -05 பேர் இரண்டாம் நிலைத் தரவுகளாக நூல்கள்,இணையத்தளங்கள், கட்டுரைகள், சஞ்சிகைகள், ஆய்வுக்கட்டுரைகள் போன்றன பயன்படுத்தப்பட்டன. இவ்வாறு பெறப்பட்ட பண்பு ரீதியான தரவுகள் விபரணமுறையினூடாக அல்லது கருத்தாக்க முறையினூடாக பகுப்பாய்வு செய்யப்பட்டு தகவல்கள் பெறப்பட்டன. ஓவியக்கலை, கட்டடிடக்கலை உட்பட ஏனைய நுண்கலைகளிலும் ஒரு முஸ்லிம் தனது ஆற்றலை வெளிப்படுத்துகின்றான் என்பதை இவ்வாய்வு முன்வைத்துள்ளது. இஸ்லாம் வளர்த்த கலைகளில் பள்ளிவாயல் கட்டிடக்கலைகளும் சியாரங்களின் கட்டிடக்கலையும்


ISBN 978-624-5736-14-0

குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய விடயங்களாகும். மேலும் இஸ்லாமியக்கட்டிடக்கலை மரபினை வெளிப்படுத்தும் பாரம்பரிய கட்டிடங்களை பாதுகாப்பதும் அவற்றினை பேணி நல்லமுறையில் வைத்திருப்பதும் எமது தலையாய கடமையாகும். ஆனால் இன்று சியாரங்கள் தொடர்பாக மக்கள் மத்தியில் காணப்படுகின்ற தவறான எண்ணங்களினால் இவை அழிக்கப்பட்டும் வருகின்றன. மேலும் இவ்வாறு அழிக்கப்பட்டு வருகின்றமையினால் முஸ்லிம்களின் வரலாறு, பாரம்பரியம் என்பன இல்லாமல் ஆக்கப்பட்டு வருகின்றன. இவற்றினை பாதுகாத்து ஆவணப்படுத்தி வைப்பதன் மூலம் எதிர் வரும் சந்ததியினருக்கம் தெளிவூட்டலாம். இவற்றை விதந்துரைகளாக குறிப்பிடலாம்.

**திறவுச் சொற்கள்**: பள்ளிவாயல், சியாரங்கள், கட்டிடக்கலை, அழகியல், மரபு

## ஆய்வு அறிமுகம்

உலக கட்டிடக் கலை மரபுகளுக்கு இஸ்லாமிய நாகரீகம் அதன் தனிச் சிறப்பான பள்ளிவாசல் கட்டிட அமைப்பு மூலமும் சமயச் சார்பற்ற பொதுக் கட்டிட அமைப்பு மூலமும் பெரும்பங்காற்றியுள்ளது. மத்திய கிழக்கு நாடுகள் ஸ்பெயின், இஸ்பஹான், இந்தியா போன்ற உலக நாடுகள் பலவற்றில் மத்திய காலத்துக்குரிய சிறந்த நுட்பமான கட்டிடக் கலைகள் முஸ்லிம்களின் கட்டிடக் கலை சாதனைகளின் சின்னங்களாக விளங்குகின்றன. வியக்க வைக்கும் அளவு விசாலமானதாகவும் அலங்கார வேலைப்பாடுகள் கொண்டதாகவும் காணப்படும் கட்டிட நிர்மாணங்களில் பள்ளிவாசல்கள் பிரதான இடத்தை வகிப்பதாக கருத முடியும். இதற்காக காட்டக் கூடிய பல உதாரணங்களில் இப்னு பள்ளிவாசலும் ஒன்றாகும். வரிசையாக உள்ள அலங்காரம்மிக்க பெரிய வளைவுகள் தூண்களிலன்றி பாரிய சுவர்களில் பொருத்தப்பட்டுள்ளன. சுவர்களின் மேல் பக்கத்தில் சுண்ணாம்புச் சாந்தினாலான அலங்கார வேலைப்பாடுகள் கொண்ட ஜன்னல்கள் காட்சி தருகின்றன. தொழுகைக்கான பெரிய மண்டபமும் லியாதாஸ் பகுதியில் உள்ள மனாராவும் இப் பள்ளியின் கவனத்தைக் கவரும் ஏனைய சில அம்சங்களாகக் குறிப்பிடப்படுகின்றன. எவ்வாறாயினும் இலங்கையில் முஸ்லிம்கள் உருவாக்கிய பண்டைய கட்டிடக் கலைக்குரிய தடயங்கள் மிகக் குறைவாகவே உள்ளன. பழைமையான பள்ளிவாசல்களும் மத்ரஸாக் கட்டிடங்களும் அந்நிய காலனித்துவ படையெடுப்புக்களால் அழிக்கப்பட்டமை இதிலொரு காரணமாக கொள்ளப்பட வேண்டும் (அனஸ், 2007).

இஸ்லாத்தின் தோற்றத்திற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பே உலகின் பல்வேறு பிரதேசங்களில் நாகரீகங்களில் கட்டடக்கலை வளர்ச்சி கண்டு இருந்தது. உலக அதிசயங்களாக கருதப்படுகின்ற எகிப்திய பிரமிட், சீன மதிற்சுவர் என்பன இஸ்லாத்திற்கு முற்பட்ட கால கட்டடக்கலை வளர்ச்சியைக் காண்பிக்கின்றன. நபி(ஸல்) அவர்களுக்கு முற்பட்ட காலப்பகுதியில் ஜாஹிலிய சமூகத்தவரிடையே கட்டடக்கலை என கணிக்கப்பட்ட எத்தகைய கலை மரபும் இருந்ததாக அறிய முடியாதுள்ளது. நிரந்தரமாக ஒரு இடத்தில் குடியிருக்கவோ நகரங்களை தீர்மானிக்கவோ அவர்கள் முயலவில்லை. சமூகச்சூழல் அதற்கு இடம் கொடுக்கவில்லை. இக் காலப்பிரிவில் காணப்பட்ட ஒரு பிரதான கட்டடமாக புனித க.்.பா பள்ளிவாசல் மட்டுமே காணப்பட்டது. சூரிய ஒளியில் சுடப்பட்ட செங்கற்களினால்

அமைக்கப்பட்டுள்ளது. க.்.பா நாற்சதுர வடிவில் எவ்வித கூரைகளும் அற்று காணப்பட்டது நபி(ஸல்) அவர்களின் காலத்தில் கிறிஸ்துவுக்குப் பின் 622 இல் மஸ்ஜிதுந் நபவி பள்ளிவாசல் கட்டப்பட்டது. இவர்களை அடுத்து வந்த கலிபாக்கள் எனப்படும் இஸ்லாமிய ஆடசியாளரக்ள் இஸ்லாத்தைப் பரப்பும் நோக்காக உரோம், பாரசீகம் போன்ற பிரதேசங்களுக்கு விஜயம் செய்து அங்கு பள்ளிவாசல்களை கட்டும் பணிகளில் ஈடுபட்டார்கள் (இக் காலப்பகுதி கி.பி635-639). இவர்களை அடுத்து வந்த உமையாக்கள் காலபப்குதி செல்வச் செழிப்பு மிக்கதாகக் காணப்பட்டதால் அதிகமான அழகிய பள்ளிவாசல்கள் உருவாகக் காரனமாய் அமைந்தன. பின்னர் பக்தாதுக்கு உள்ளேயும் பக்தாதுக்கு வெளியேயும் அப்பாசியர்கள் காலப்பகுதியில் பளளிவாசல்கள் கட்டப்பட்டதுடன் இக்காலத்தில் கட்டப்பட்ட பள்ளிவாசல்களின் தோற்றங்களில் மாற்றம் ஏற்பட்டது. எகிப்தில் உமர் இப்னு ஆஸ் அமைத்த பள்ளிவாசல்களையும் அப்பாஸியர் கால கலை நுட்பங்களோடு வடிவமைத்தனர். நபி (ஸல்) அவர்கள், கலிபாக்கள், உமையாக்கள், அப்பாஸியர்கள் போன்றோரின் முயற்சிகளால் பள்ளிவாசல்கள் அமையப் பெற்றதோடு பிற்பட்ட காலங்களில் சுவரோடுகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. மர்வு நகரில் கட்டப்பட்டுள்ள கமதானி மஸ்ஜிதின் கட்டிடக்கலை சிறப்பியல்புகளை இது கொண்டுளள்து. தைமூர் காலக்கட்டிடங்களில் சூராசானின் கட்டிடக்கலை மரபும் சீனா துருக்கியக் கட்டிடக்கலையின் செல்வாக்கும் தென்படுகின்றன. தைமூர் தனது மனைவியின் ஞாபகார்த்தமாக சமர்கந்தில் கட்டிய மஸ்ஜித் பிரசித்தமானது அதன் நுழைவாயிலில் இரட்டை குப்பாக்கள் உண்டு. தைமூர் தமது அடக்க ஸ்தலத்திற்காக கட்டிய சமாதிக்கட்டிடமும் குறிப்பிடத்தக்கதாகும். முற்றாக சுவர் ஓடுகளால் அலங்கரிக்கப்பட்ட குப்பா ஒன்று அதனை அலங்கரிக்கின்றது. பல வர்ண மொசாயிக் வேலைப்பாடுகள் அதில் செய்யப்பட்டுள்ளன. அதன் வலது புறத்திலும் இரு மினராக்கள் உண்டு (உஸ்மான் சாஹித். 2001).

உதுமானியர் 600 ஆண்டுகள் துருக்கியை ஆட்சி செய்து கொண்டனர். கி.பி 1299-1501 வரை புகுசா அதன் தலை நகரமாக இருந்தது அதன் பின் கொன்ஸ்தாந்தி நோபிள்(இஸ்தான்புள்) நகரை தலை நகரமாக்கினர். உதுமானியர் ஆட்சியிலும் மேலே கூறப்பட்டவாறான கட்டிடங்கள் பல நிர்மாணிக்கப்பட்டன. இன்று இந்திய உப கண்டத்தில் காணக்கூடியதாக உள்ள முஸ்லிம் கட்டிடம் முல்தானில் உள்ள ஷா யூசூப் சுர்தேவ் என்பவர் அடக்கப்பட்டுள்ள சமாதிக்கட்டிடமாகும். கி.பி 1152 இல் நிர்மாணிக்கப்படட் இச்சமாதி தட்டையான கூரையிடப்பட்ட ஒரு நீள் சதுர கட்டிடமாகும் .அதன் சுவர்கள் பல நிற கேத்திர கணித, எழுத்தணித் தாவர வடிவ அலங்கார வேலைப்பாடுகளையுடைய சுவர் ஓடுகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. மொஹலாயர் கி.பி 1564 டில்லியில் நிர்மாணித்த கட்டிடங்களில் ஈரான், இந்தியக் கட்டிடக்கலைப் பண்புகள் உள்ளன. சுல்தான் ஹுமாயினுக்கு சமாதி கட்டும் பொறுப்பை அவரது மனைவி பாரசீக கட்டிக் கலைஞனிடம் ஒப்படைத்தாள். இதன் காரணமாக முதல் முறையாக ஈரனிய கட்டிடக்கலை மரபு இந்தியக் கட்டிடக்கலையுடன் கலந்து ஈரானிலும் மத்திய ஆசியாவிலும் செல்வாக்கு பெற்றிருந்த குமிழ் வடிவக் கும்மட்டம், வளைமாடத்தையுடைய படுக்கை விதானம், அறைத் தொகுதி, தாழ்வாரம் சமாதியை சூழவுள்ள சோலை என்பன இந்திய கட்டிடக்கலையில் நுழைந்த பாரசீக கடட்டிக்கலை அம்சங்களாகும். இந்திய கட்டிடக்கலைக்கு சொந்தமான கும்மட்டத்தையுடைய சிறிய அறை

பளிங்குக் கல் வேலைப்பாடுகளையுடைய கருங்கட் சுவர் என்பனவும் கலந்து ஈரானிய இந்திய கட்டிடக் கலை மரபுகளுடன் அச்சமாதி காட்சியளித்தது. .இந்த பண்புகளை சிறப்பாக கையாண்டு ஆக்ரா நகரில் கட்டப்பட்ட ஜஹான் கீர் மஹால் இல் வேட்டை நிகழ்சிகள் போன்ற காட்சிகள் வரையப்பட்டிருந்தன. அத்துடன் தாவர அலங்கார வேலைப்பாடுகளும் இடம்பெற்றிருந்தன (அமீன், 2008).

**ஆய்வின் நோக்கம்**

இவ்வாய்வு பிரதானமாக சம்மாந்துறையின் முஸ்லிம் பிரதேசத்தில் வெளிப்படுத்தப்படும் கட்டிடங்களான பள்ளிவாயல்கள் சியார கட்டிட அமைப்பக்களில் இஸ்லாமிய கட்டடிடக்கலை மரபுகள் எவ்வாறு தாக்கம் செலுத்தியிருக்கின்றன. அவற்றில் எவ்வாறான இஸ்லாமிய கட்டிடக்கலை மரபுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதுடன் அக்கட்டிடங்களில் அழகியற்கலை வெளிப்பாடுகள் அவற்றின் முக்கியத்துவம் தொடர்பிலும் ஆராய்வது இவ்வாய்வின் நோக்கமாகக் கொள்ளப்படுகின்றது. மேலும் இக்கட்டிடங்களில் சில அழிவடைந்து செல்லுகின்றமையினால் இவற்றினை ஆவணப்படுத்தி வரும் சந்ததியினருக்கும் தெளிவூட்டுவதுமாகும்.

**சம்மாந்துறை அறிமுகம்**

இலங்கையின் எல்லாப் பாகங்களிலும் முஸ்லிம்கள் பரந்து வாழ்ந்தாலும் சில மாவட்டங்களில் ஐதாகவும் வாழ்கின்றனர். அம்பாரை மாவட்டத்தில் ‘‘தென்கிழக்கு’’ என அடையாளப் படுத்தப் பட்டுள்ள பிரதேசம் முஸ்லிம்கள் செறிந்து வாழும் தனித்துவமான பிரதேசம் என்பதில் எவ்வித கருத்து வேறுபாடுகளும் இல்லை. சம்மாந்துறையில் வசிக்கும் 90 வீதமான மக்கள் முஸ்லிம்களாவர். ஏழு ஜும்ஆ பள்ளிவாசல்கள் உட்பட 40 பள்ளிவாசல்கள் இவ்வூரின் சிறப்புக்கும் சான்றாக உள்ளன. தீன் ஒளி பரப்ப ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனி அறபுக் கலாசாலைளும், குர்ஆன் மனனம் செய்ய தனியான குர்ஆன் மனனக் கலாசாலை, 25 இற்கும் மேற்பட்ட முஸ்லிம் பாடசாலைகள், தொழினுட்பக் கல்லூரி, தென்கிழக்குப் பல்கலைக் கழக பிரயோக விஞ்ஞான பீடம் போன்ற ஆன்மீக, லௌகீக தேவைகளை நிறைவேற்றும் தாபனங்கள் நிறைந்த செல்வச் செழிப்புள்ள பகுதியே சம்மாந்துறை. மேலும் வைத்திய கலாநிதிகள், பொறியியலாளர்கள், நிருவாக சேவை உத்தியோகத்தர்கள், கணக்காளர்கள், ஆசிரியர்கள் என்று நூற்றுக் கணக்கானோர் இவ்வூரை அழகு படுத்துகின்றனர். இங்குள்ள மக்களில் 75 வீதத்திற்கும் மேற்பட்டோர் விவசாயிகளாக உள்ளனர். ஏறக்குறைய 40000 ஏக்கருக்கும் மேற்பட்ட இருபோக செய்கைக்குற்பட்ட காணிகள் இவ்வூரின் பொருளாதாரத்தை மேம்படுத்திக் கொண்டிருக்கின்றன.

**ஆய்வுப் பிரச்சினை**

முஸ்லீம்களிடையே அழகியல் கலை தொடர்பான ஈடுபாடுகள் காணப்பட்டுள்ளது. முஸ்லிம்கள் வளர்த்த அழகியல் கலை தொடர்பான காலத்திற்கு காலம் வெளியிடப்பட்ட நூல்கள் எமக்கு தகவல்களைத் தருகின்றன. இவற்றில் இஸ்லாமியர்களின் அழிகியற்கலைகளில் பள்ளிவாயல் கட்டிடக்கலை பிரதான இடத்தை வகிக்கின்றது. வரலாற்று


ISBN 978-624-5736-14-0

ரீதியாக தடம்பதித்து ஆவணப்படுத்தப்பட்ட பள்ளிவாயல்களின் கட்டிடக் கலை தொடர்பான அறிவினைப்பெற முடிந்தாலும் சம்மாந்துறை பிரதேசத்தில் காணப்படும் பள்ளிவாயல்கள் மற்றும் சியாரங்கள் என்பவற்றின் தகவல்கள் ஆவணப்படுத்தப்படவில்லை மற்றும் சியாரம் தொடர்பாக இஸ்லாமியரிடத்தில் காணப்பட்ட பிழையான கருத்துக்கள் அவற்றின் மீது ஆய்வினை மேற்கொள்வதற்கு பிரதான சவாலாக காணப்பட்டது. அத்துடன் சம்மாந்துறை பிரதேசத்தில் காணப்படும் பள்ளிவாயல்களினதும் சியாரங்களினதும் அழகியல் சம்மந்தமாகவும் அவற்றின் அளவுகள் சம்மந்தமாகவும் எவ்வித தகவல்களும் எழுதப்பட்டதாகக் காணப்படவில்லை.

**ஆய்வு முறையியல்**

ஆய்வினை திறன்பட செய்து முடிக்க ஆய்வுடன் தொடர்புடைய தரவுகள் இன்றியமையாததாகும். இவ்வாய்வினை சீராக செய்வதற்கு முதலாம் நிலைத் தரவுகள் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் பயன்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். முதலாம் நிலைத்தரவுகளாக நேரடி அவதானிப்பு, நேர்காணல் முறைகள் மூலமாக தரவுகள் பெறப்பட்டுள்ளன. இப்பிரதேசம் தொடர்பாக நன்கு அனுபவமுடையவர்கள் சிலருடனும் நேர்காணல் மேற்கொள்ளப்பட்டது. மேலும் நோக்கம் கருதிய மாதிரியடிப்படையில் முஸ்லிமகளது இஸ்லாமியக்கட்டிடக்கலை மரபினை வெளிப்படுத்தும் கட்டிடங்கள் தொடர்பான தகவல்களைச் சேகரிக்க சம்மாந்துறைப் பிரதேசத்திலிருந்து நோக்கம் கருதிய மாதிரியடிப்படையில் 05 பங்குபற்றுனர்கள் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களிடம் கட்டமைக்கப்படாத நேர்காணல் மூலம் தகவல்கள் பெறப்பட்டன. அதன் விபரம் பின்வருமாறு,

- நேர்காணல் 1 அலியார் ஐ.எல்.எம். மௌலவி. (வயது 75)
- நேர்காணல் 2 ஜெமீல் எம்.ஐ.எம்.டாக்டர் (வயது 63)
- நேர்காணல் 3 றசூல்.எம். (வயது 78)
- நேர்காணல் 4 யாகூப். பி. (வயது 55)
- நேர்காணல் 5 சத்தார.எல் (வயது 77)

அத்துடன் இரண்டாம் நிலைத்தரவுகளாக இந்த தரவுகளுக்கு வலுவூட்டும் வகையிலான நூல்கள், சஞ்சிகைகள், காணொளிகள், பத்திரிகைகள், இணையத்தளங்கள் என்பவற்றிலிருந்து தகவல்கள் பெறப்பட்டன. இவ்வாறு பெறப்பட்ட பண்பு ரீதியான தரவுகள் விபரண முறையினூடாக பகுப்பாய்வு செய்யப்பட்டு தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டது.

**இலக்கிய மீளாய்வு**

ஆய்வு எனும் பாதையில் பயணிக்கத் தொடங்கும் ஆய்வாளனுக்கு இலக்கிய மீளாய்வானது சிறந்ததோர் வழிகாட்டியாக ஆய்வாளனின் பயணப் பாதையை சீர்படுத்தி கொடுக்கின்றது. ஆய்வினை சிறப்பான முறையில் நடத்திச் செல்ல, எண்ணக் கருவாக்க சட்டகமொன்றை உருவாக்க இலக்கிய மீளாய்வு மிகவும் அவசியமானது.அந்த வரிசையில் இவ்வாய்வு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் உலகளாவிய மற்றும் இலங்கை தேசத்தில் இன்றும் தொடர்ந்த வண்ணம் இருக்கின்றது.

முஹம்மது அக்ரம். (2013). என்பவரால் எழுதப்பட்ட ''நடைமுறைக்கேற்ற இஸ்லாம் (பகுதி 02)'' இந்த நூலின் ஊடாக முஸ்லிம்களது கட்டிடக்கலை பாரம்பரியம் மற்றும் அதனுடைய வரலாறுகள் சம்பந்தமாகவும் இஸ்லாமிய கட்டிடக்கலையின் முக்கிய அடிப்படை கூறுகளான மிஹ்றாப், மிம்பர், மினாரர், கும்மட்டம்…. போன்றவைகளின் அளவு அழகியல் தொடர்பான விடயங்களை குறிப்பிட்டு நிற்பதால் ஆய்வுக்குத் துணைபுரிகின்றது.

அமீன் எம்.ஐ.எம். (2008). என்பவரால் எழுதப்பட்ட ''முஸ்லீம்கள் வளர்த்த அறிவியல் அழகியல் கலைகள்'' என்ற இந்த நூலினூடாக இஸ்லாமிய கட்டிடக்கலையின் தோற்றமும் அதன் வளர்சியானது பல்வேறு கட்டங்களினூடாக நேக்கப்படகிறது. ஆதாவது இஸ்லாத்தின் தோற்றத்திற்கு முன், நபி(ஸல்) கால கட்டடக்கலை, கலீபாக்கள் கால கட்டடக்கலை, உமையாக்கால கட்டடக்கலை, அப்பாசியர் கால கட்டடக் கலை, ஸ்பெயின் கட்டடக்கலை.. இவ்வாறு ஒவ்வொரு காலங்களிலும் அதன் வளர்சி உயர்வடைந்து செல்கின்றமையை அறியக்கூடியதாக இருக்கின்றது.

சாக்கீர் எம்.ஐ.எம்.(2012) என்பவரால் எழுதப்பட் ''சம்மாந்துறை பெயர் வரலாறு'' இந்த நூலின் ஊடாக ஆய்வுப்பிரதேசமான சம்மாந்துறையின் பெயர் எவ்வாறு உருவாகியது என்பதற்கான விடைகளுடன், கிழக்கிலங்கையில் சிறப்புடன் விளங்கும் பழம் பெரும் நகரங்களில் முக்கிய இடத்தை எவ்வாறு வகிக்கின்றது போன்றவற்றை அறியக்கூடியதாக இருக்கின்றது.

அப்துல் றாசீக் எஸ். (2012) என்பவரால் எழுதப்பட''முஸ்லிம் மத்தியில் குடி வழிமுறை'' இந்த நூலில் சம்மாந்துறை பிரதேச முஸ்லிம்கள் மத்தியில் காணப்படும் பண்பாட்டு விழுமியங்களான குடி வழிமுறை, திருமண சடங்கு சம்பிரதாயம் தொடர்பாக ஆராயப்பட்டள்ளது. ஏற்றத்தாழ்வு குடி வழியில் இல்லை எனவே ''குடி வழி'' என்பது ஒரு தொழில் சார்ந்த பிரிவையோ, சாதி சார்ந்த பிரிவையோ குறித்து நிற்பதில்லை. மாறாக உயர்ந்த குடி,தாழ்ந்த குடி என்ற வேற்றுமைகளை முஸ்லீம்களிடத்தில் உருவாக்கி வேறுபடுத்தவும் இல்லை. ஆனால் எண்ணிக்கை பரம்பலில் கூடிய குறைந்த குடிவழி என்ற ஒரு நிலைப்பாட்டை காணலாம் முஸ்லிம்களிடத்தில் இக்குடிவழி பரம்பல் வேரூன்றிய பிற்பாடு சமத்துவ அடிப்படையில் மக்களை இனங்காணுவதற்கு மாத்திரம் பயன்படுவதைக் காணலாம். திருமணமானது ''அஜ்னபி'' (திருமணம் முடிக்க தகுதியானவர்கள்) ஆன ஆண், பெண் திருமணம் முடிக்க ''ஹலால்''(அல்லாஹ்வால் அனுமதித்தவை) ஆக்கப்பட்டுள்ளன. மற்றும் ''மஹ்றமி'' (திருமணம் முடிக்க அனுமதிக்கப்படாதவர்கள்) திருமணம் முடிப்பது ''ஹராம்''(அல்லாஹ் விரும்பாதவை) ஆக்கப்பட்டுள்ளது .இத்தகைய உறவுகளை கணக்கில் கொண்டுதான் திருமண சம்பந்தங்கள் தேட முயற்சிக்க வேண்டும். இவ்வாறான வழிகாட்டி இலகு படுத்தி இஸ்லாம் நிகாஹ் செல்படியாவதற்குரிய முக்கிய நான்கு விதிகளை கூறி நிற்கின்றது. .மணமகன்- மணமகள், வலி, .சாட்சிகள், .ஈஜாப்-கபுல் போன்ற விடயங்கள் விளக்கப்பட்டுள்ளன.

றமீஸ் அப்துல்லாஹ். (2019) ''சம்மாந்துறை வரலாறும் வாழ்வியலும்'' இந்த நூலின் ஊடக சம்மாந்துறையின் உடைய வரலாறு மற்றும் பிரசித்தமான பள்ளிவாசல்களுடைய

தகவல்களும் குறிப்பிட்ட சில சியாரங்களது தகவல்கள் சம்பந்தமாக அறியக்கூடியதாக இருப்பதன் மூலம் ஆய்வுக்கு மிகவும் துணை புரிகிறது.

அனஸ் எம்.எஸ்.எம். (2007) என்பவரால் எழுதப்பட ''இலங்கையில் முஸ்லீம் நுண்கலை'' முஸ்லீம்களிடையே காணப்பட்ட கலைகளான சிலம்பாட்டம், ஓவியம், இசை, சிற்பம்…போன்றவற்றின் ஆரம்பகாலம் தொடக்கம் இன்றுவரை எவ்வாறு காணப்படுகின்றது. மேலும் இஸ்லாமிய கட்டிடக்கலையின் வரலாறு மற்றும் கட்டிடக் கலை ஒரு கலையாகவும் அறிவியலாகவும் இருப்பதாக கூறப்பட்டாலும் கட்டிடக் கலையில் அழகியல் பண்பே முக்கியமானது. இது அழகியல் சார்ந்த ஒரு துறையாகவும் பிற அழகியல் துறையான ஓவியம், சிற்பம் போன்றவற்றை மக்கள் வெளியிலிருந்து அனுபவிப்பதுடன் அவற்றின் கலைத்துவம் மன நிறைவையும் மகிழ்வையும் கொடுக்கிறது. ஆனால் கட்டிடக்கலை மனிதர்கள் வெளியிலிருந்து அனுபவிப்பதோடன்றி உள்ளே சென்றும் வாழ்கிறார்கள். அதனால் கட்டிடங்கள் குறிப்பிட்ட சில தேவைகளை நிறைவு செய்வதுடன் கட்டிடக்கலை, அழகியலாகவும் உருவெடுக்கின்றது. ஒரு கட்டடத்தின் அழகியலானது மூன்று கூறுகளின் ஊடாக உணரப்படுகின்றது.உணர்வுசார் கூறுகள், வடிவம்சார் கூறுகள், தொழிநுட்பம்சார் கூறுகள் என வகைப்படுத்தலாம்.இவை போன்ற விடயங்கள் விளக்கப்பட்டுள்ளன.

## ஆய்வு முடிவுகளும் கலந்துரையாடலும்

### பள்ளிவாசல்களின் தோற்றமும் அவற்றின் கட்டிடக்கலை அழகியலும்

இஸ்லாமியர்கள் தமது வழிபாடுகளை மேற்கொள்வதற்காகவும் பாரம்பரிய கல்வி முறைகளை கற்பதற்காகவும் சட்டம், சடங்கு, வணக்க வழிபாடுகள் என்பவற்றை நிறைவேற்றுவதற்காகவும் பயன்படுத்தும் அல்லாஹ்வின் புனித மாளிகையே பளளிவாசல் என அழைக்கப்படுகின்றது. இவை இடத்துககிடம் காலத்துக்கு காலம் அளவில் மாறுபட்டவையாக காணப்பட்டாலும் இவற்றின் வடிவம், அமைப்பு, சட்ட ஒழுங்குகள் என்பனவெல்லாம் ஒரே தன்மை கொண்டு காணப்படும். இஸ்லாமிய கலைகள் நாகரீகம் பண்பாடு என்பன ஊற்றெடுத்த இடமாக பள்ளிவாசல்கள் காணப்படுகின்றன. இவற்றினை தமது தேவைக்கு ஏற்றவாறு அளவுகளில் மாற்றஙக்ளை ஏற்படுத்தி இஸ்லாமிய கலைஞர்கள் இவை பிற்பட்ட காலங்களில் பிற நாகரீகங்களில் இருந்து பெற்றுக் கொளள்ப்பட்ட பண்பாடுகளில் இருந்து கவர்ச்சிகரமான பளளிவாசல்களை தனியான மரபுகளுடன் வளரச்சி அடையச் செய்தனர். இஸ்லாத்திற்கு முற்பட்ட காலத்திலே பளளிவாசல் கட்டிடக் கலைகளின் ஆரம்ப நிலை தோற்றம் பெற்றதனை வரலாறுகள் எமக்கு கூறுகின்றது. ஆதம்(அலை), ஹவ்வா(அலை) என்ற இரு முதல் மனிதர்களும் மக்காவில் புனித க.ஃபாவை நிர்மாணித்து இறை வணக்கத்தில் ஈடுபட்டனர் இவர்கள் தமது முந்திய காலத்தில் மினா எனும் இடத்தில் வசித்ததாக அறிகிறோம். பிற்காலத்தில் இவர்களை அடுத்து வந்த தாவூத்(அலை), சுலைமான்(அலை) ஆகியோர் ஆட்சி புரிந்த காலங்களில் உருவாக்கப்பட்ட புனிதஸ்த்தலமாக மஸ்ஜிதுல் அக்ஸா பளளிவாசல் காணப்படுகின்றது. ''இறுதித் தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் காலததுக்கு முன்னர் எவ்வித அலங்காரமும் அற்ற க.ஃபா பளளிவாசல் நாற்சதுர வடிவில் எவ்வித கூரைகளும் அற்று காணப்பட்டது நபி(ஸல்) அவர்களின் காலத்தில் கிறிஸ்துவுக்குப் பின் 622


ISBN 978-624-5736-14-0

இல் மஸ்ஜிதுல் நபவி பள்ளிவாசல் கட்டப்பட்டது. இவர்களை அடுத்து வந்த கலிபாக்கள் எனப்படும் இஸ்லாமிய ஆடசியாளரக்ள் இஸ்லாத்தைப் பரப்பும் நோக்காக உரோம், பாரசீகம் போன்ற பிரதேசங்களுக்கு விஜயம் செய்து அங்கு பள்ளிவாசல்களை கட்டும் பணிகளில் ஈடுபட்டார்கள் (இக் காலப்பகுதி கி.பி 635-639)''(உஸ்மான் சாஹித், 2001).

''உதுமானியர் 600 ஆண்டுகள் துருக்கியை ஆட்சி செய்து கொண்டனர். கி.பி 1299-1501 வரை புகுசா அதன் தலை நகரமாக இருந்தது. அதன் பின் கொன்ஸ்தாந்தி நோபிள்(இஸ்தான்புள்) நகரை தலை நகரமாக்கினர். உதுமானியர் ஆட்சியிலும் மேலே கூறப்பட்டவாறான கட்டிடங்கள் பல பல நிர்மாணிக்கப்பட்டன. இன்று இந்திய உபகண்டத்தில் காணக்கூடியதாக உள்ள முஸ்லிம் கட்டிடம் முல்தானில் உள்ள ஷா யூசூப் சுர்தேவ் என்பவர் அடக்கப்பட்டுள்ள சமாதிக்கட்டிடமாகும். கி.பி 1152 இல் நிர்மாணிக்கப்பட்ட இச்சமாதி தட்டையான கூரையிடப்பட்ட ஒரு நீள் சதுரக் க்டடிடமாகும். அதன் சுவர்கள் பல நிற கேத்திர கணித, எழுத்தனித் தாவர வடிவ அலங்கார வேலைப்பாடுகளையுடைய சுவர் ஓடுகளால் அலங்கரிக்கப்பட்டுளள்ன'' (முஹம்மது அக்ரம், 2013)

மஸ்ஜிதில் பத்ர் (ஹிஜ்ரா பள்ளிவாசல்)

சம்மாந்துறையின் மரபார்ந்த பள்ளிவாசல்களின் மிகக்குறுகிய வரலாற்றைக் கொண்டது அதி உயர் வளர்ச்சியைக் கொண்ட பள்ளிவாசல்களில் இது பிரதான இடத்தை வகிக்கிறது. சம்மாந்துறையின் பிரதான நகரத்தில் அமைந்திருக்கும் இப்பள்ளிவாசல் ராபியத்துல் ஆலமீன் என்ற இஸ்லாமிய நிறுவனத்தின் சிறு பணத்தொகை உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டது. இப்பள்ளிவாசல் இன்று சம்மாந்துறை மக்களின் பண உதவி, நெல் உதவி, உடல் உதவிகளுடன் சம்மாந்துறை நகருக்கு பெருமை தரக்கூடிய அழகிய கட்டடக்கலை நிரம்பிய பள்ளிவாசலாக காட்சியளிக்கின்றது. இது மூன்று மாடிகளைக் கொண்ட இம் மஸ்ஜித் 35250 சதுர மீற்றர் பரப்பளவு கொண்டதாகவும், சம்மாந்துறையின் மிகப்பெரிய பள்ளிவாசல் ஆகவும் அடையாளம் காணப்பட்டுள்ளது. பெண்களுக்கான தொழுகை அறையும், அழகிய சதுர வடிவான தூண்களும், உருளை வடிவான தூண்களும் அவற்றுக்கிடையில் முக்கோண வடிவிலான மாடங்களும் அழகுடன் காணப்படுகின்றது. மூன்று மிஹ்ராப்புக்களுடனும் அவற்றில் மாபிள் கற்களைக் கொண்டும் அழகு படுத்தப்பட்டுள்ளது. இம்மிஹ்ராபின் நடுவில் படிக்கட்டுகளாலான மிம்பர், மிஹ்ராபுக்கு புத்துணர்ச்சியை கொடுக்கின்றது.

சம்மாந்துறையின் பிரதான ஜும்மா பள்ளியாக மக்களால் அடையாளம் காணப்பட்ட இப்பள்ளிவாசலின் தரையானது மாபிள்களைக் கொண்டு அழகுபடுத்தப்பட்டுள்ளது சுற்றிவர 90 காற்றிடைவெளிகளையும் 60 ஜன்னல்களையும் கொண்டு காணப்படும் இக்கட்டிடம் சம்மாந்துறையின் முஸ்லிம்களின் ஆன்மீக சிந்தனையின் வடிவமாக பார்க்கப்படுகிறது. முக்கோண வடிவிலான மாடங்களும் சுவர்களில் பதிக்கப்பட்டிருக்கும் ஜன்னல்களும், கதவுகளும் காணப்படும் கண்ணாடி வடிவங்கள் ஈரானிய பள்ளிவாசல்களின் ஞாபகத்தினை ஊட்டுகின்றது. இப்பள்ளிவாசலின் தெற்கு புற விறாந்தை பழைய கட்டிடத்தின் ஒரு பகுதியாகக் காணப்படுகின்றது. இதன் அகலம் 54 அடியாகவும், நீளம் 11 அடியாகவும் அதன்

விறாநதையின் உட்புறத்தில் 7 வட்டவடிவமான தூண்களும் காணப்படுவதுடன் அவற்றிற்கு அமைந்திருக்கும் நீர் தொட்டிகள் பிரதான இடத்தை வகிக்கிறன. சம்மாந்துறையில் அடையாளம் காணப்பட்ட பள்ளிவாசல்களில் அதிகூடிய நீர் தொட்டிகளை கொண்டுள்ள பள்ளிவாசல் இது என்றால் அது மிகையாகாது. ஸ்பெயின் பள்ளிவாசல்களில் நடைபாதை, விறாந்தை மிக முக்கியமான அம்சமாக காணப்படும் .இவற்றினை போன்று இப்பள்ளிவாசலிலும் நடைபாதை, விறாந்தை முக்கியத்துவம் பெறுவதுடன் அவை நவீன கட்டடக் கலையின் வடிவமாக பார்க்கப்படுகிறது. இப்பகுதியானது பச்சை நிற கண்ணாடி கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்விறாந்தையின் நீளம் 84 அடி, அகலம் 24 அடி கொண்டு அமைக்கப்பட்டுள்ளதுடன் அதன் இரு மருங்கிலும் பூச்செடிகள் நடப்பட்டு பள்ளிவாசலின் அழகை மேலும் அழகுபடுத்திக் காட்டுகிறது. மேலும் நடைபாதை, விறந்தையோடு சேர்ந்த நுழைவாயில் கட்டிடக்கலை அழகியல் இப் பள்ளிவாசலுக்கு மற்றுமோர் அழகையும், கம்பீரத்தையும் வழங்கி நிற்கின்றது. குப்பா வடிவம் பள்ளிவாசல்களில் சேர்ந்து காணப்படுவது பொதுவான ஒரு மரபாகும். ஆனால் இப்பள்ளிவாசலின் குப்பா வடிவமானது நுழைவாயிலின் மேல் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதுடன் பள்ளிவாசலின் கட்டிடம் இவற்றிற்கு பின்னணிக் காட்சியாக காணப்படுகின்றது. மின்குமிழ் வடிவமானக உள்ள இக் குப்பாவுடன் சேர்ந்து காணப்படும் எண்கோண வடிவிலான குட்டி மினாரா குப்பாவின் அழகையும், பள்ளிவாசலின் அழகையும் இரசிக்க செய்கின்றது. நுழைவாயிலின் கதவுகள் இஸ்லாமிய மரபியல் கலைவடிவங்கள் வெளிப்படும் வண்ணம் இரும்பு கம்பிகளால் வேயப்பட்டுள்ளது. நுழைவாயில் கதவு 24 அடி அகலம் கொண்டதாகவும் அரங்குகளிலும் இருக்கும் சிறுகதவுகள் 16 அடி அகலம் கொண்டதாக காணப்படுவதுடன் சுற்றி வர இருக்கும் கம்பி வேலிகள் இஸ்லாமிய கலை மரபுடன் மேலும் ஒரு அழகினைக் கொடுக்கின்றது. இவை எல்லாவற்றிற்கும் மேலாக இப்பள்ளிவாசலின் அழகினை தலை நிமிர்த்திப் பார்க்கச் செய்யும் கட்டிடக்கலை அழகியலின் பிரதான இடத்தை வகிப்பது இவற்றின் மினாராவாகும். சதுரவடிவில் உயர்ந்து காணப்படும் இம் மினாரா சம்மாந்துறையில் அடையாளம் காணப்பட்ட ஏனைய பள்ளிவாசல்களின் மினாராக்களை விட உயர்ந்ததும், அழகுவாய்ந்ததுமாகும். மினாராவின் நான்கு பக்கங்களிலும் நிறக் கண்ணாடிகளைக் கொண்டு மினாராவின் மேல் காணப்படும் குப்பா மணி வடிவில் காட்சியளிக்கின்றதுடன், இவற்றின் மேல் கும்மட்டமும், பிறையும் காட்சியளிக்கின்றன.

**பெரிய பள்ளிவாசல் (கோசப்பா பள்ளி)**

கோசப்பா பள்ளிவாசல் என்றழைக்கப்படும் இக்கட்டிடம் ஆனது கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டு வரை பழமை வாய்ந்தது. சம்மாந்துறை வீரமுனை கிராமத்திற்கும் பழைய சந்தைக்கும் இடையில் காணப்படும் இப்பள்ளிவாசல் ஆரம்ப காலத்தில் கோசப்பா அவுலியா அடக்கம் செய்யப்பட்ட சியாரமாகக் காணப்பட்டது. இச் சியாரமானது ஆரம்ப காலத்தில் இந்துக்களின் பாதுகாப்பிலும் அவர்கள் தரிசிக்கத்தக்க விதமாகவும் காணப்பட்டது. பிற்பட்ட காலங்களில் முஸ்லிம்களின் வணக்கஸ்தலத்திற்காக மாற்றப்பட்டது. இக்கட்டிடம் ஆரம்ப காலத்தில் வைக்கோலால் வேயப்பட்ட வலிமையான கட்டடமாக காணப்பட்டது. இவை பின் 1808இல் புனர் நிர்மாணம் செய்யப்பட்டு மரங்களைக் கொண்டும், கற்களைக் கொண்டும் வடிவமைக்கப்பட்டிருந்தது. இஸ்லாமியர்களின் மரபார்ந்த கட்டிட வடிவமைப்புக்கள் இப்


ISBN 978-624-5736-14-0

பள்ளிவாசலில் காணப்படாவிட்டாலும், அவற்றின் அழகியலும், வடிவமும் பார்வையாளனை கவர்ந்து நிற்கின்றது.இப்பள்ளிவாசலின் நீர்த்தொட்டியானது இந்துக்களால் பொழியப்பட்ட கருங்கற்களைக் கொண்டு சம்மாந்துரறையின் ஒவ்வொரு குடியின் உதவியுடனும் கலை ரசனை பொருந்தியதாக கட்டப்பட்டது என்று கலாபூஷணம் ராசிக் அவர்கள் கூறியுள்ளார்.

''இப்பள்ளிவாசலானது உமையாக்களின் கட்டிடக்கலை தழுவல்கள் கொண்டதாகவும் காட்சியளிக்கின்றது. மரத்தாலான கூசா வடிவத்தில் தூண்களின் மேல் இலை,கொடி அலங்கார வேலைப்பாடுகள் கலைநயத்துடன் வெளிக்கொணரப்பட்டுள்ளது. பின்னர் 1925 ஆம் ஆண்டு புனர் நிர்மாணம் செய்யப்பட்ட இப்பள்ளிவாசல் முஸ்லிம்களின் ஜும்மா பள்ளியாக மாற்றம் பெற்றது. இப்பள்ளிவாசலின் கூரை அமைப்பானது சிப்பி ஓடுகளினால் வேயபட்டும், டோறிக் வடிவத்தூண்களையும் கொண்டிருந்தது. இவற்றிக்கு பிற்பட்ட காலங்களில் இந்தியாவிலிருந்து வந்த கட்டிடக் கலைஞரான நாகூர் மௌலானா என்பவரினால் கலைநுட்பம் கொண்ட அழகிய பள்ளிவாசலாக விரிவுபடுத்தப்பட்டது. இவை இக்காலத்தில் பிரதான பள்ளிவாசலாகவும் கிழக்கின் முதலாவது மெத்தை பள்ளியாகவும் அழகுடன் காட்சியளித்தது. 14880 சதுர அடிகள் பரப்பு கொண்ட இப்பள்ளிவாசலின் விறாந்தைகளும், ஜன்னல்களும் இஸ்லாமியக்கலை அழகு பொருந்தியதாகும். 26 அடிகள் உயரம் கொண்ட இக் கட்டிடத்தின் தூண்கள் குறைவாக நிர்மாணிக்கப்பட்டு இரும்புக் கட்டிகளைக் கொண்டு மாடி அமைக்கப்பட்டிருந்தது.இவற்றின் மேற்குப்புறம் 2 குப்பாக்களும் கிழக்குப் புறம் 2 குப்பாகக்களும் நடுவில் அழகிய விறாந்தை அமைத்து அதன்மேல் 3 தட்டு மினாராவும் அவற்றின்மேல் காணப்பட்ட குப்பா பள்ளிவாசலின் கட்டிடக்கலையின் அழகியலை மேலும் இரசிக்க செய்கின்றதாக வடிவமைக்கப்பட்டிருந்தது. பள்ளிவாசலின் உட்புறத்தில் வடிவமைக்கப்பட்டிருந்த மொசைக் அலங்காரம் மற்றும் அரபு எழுத்தணிக் கலை முஸ்லிம்களின் அழகியலை ஞாபகம் ஊட்டுவதாக அமைந்திருந்தது. இவை அண்மைக் காலப் புனர்நிர்மாணப் பணியில் அழிந்துவிட்டது. இருந்தபோதிலும் இவற்றில் இருந்து கிடைத்த அலங்கரிக்கப்பட்ட ஒரு டொரிக் தூண் அவற்றின் ஞாபகார்த்தமாக காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இக்கட்டிடத்தின் அலங்காரங்கள் மிக அழகாக வடிவமைக்கப்பட்டு பக்தர்களை உள்வாங்கும் ரசனை அழகு பொருந்தியதாக காட்சியளிக்கின்றது. இவற்றின் கிரேக்க கலை மரபுகளுடனான டொரிக் தூண்கள் கலைநயம் பொருந்திய தூண்களாக காணப்படுகின்றன. தூண்களின் நடுப்பகுதியில் பீலி வடிவம் செதுக்கப்பட்டு மேல் பகுதியில் பூ, இலை ,கொடி அலங்காரமும் வடிவமைக்கப்பட்டுள்ளது.'' (றமீஸ் அப்துல்லாஹ், 2019)

இப் பள்ளிவாசலின் இறுதிப் புனர் நிர்மாணமாக 2008.04.29 இல் பாராளுமன்ற உறுப்பினர், அலியார் மௌலவி (இஸ்லாமிய ஆலோசனை சபைத் தலைவர்) அவர்களினால் அடிக்கல் நாட்டப்பட்டது. .இப்பள்ளிவாசல் சம்மாந்துறையின் பெருமையை எடுத்துக்காட்டும் வகையில் சரியான திட்டமிடலுடன் மூன்று மாடிகளை கொண்டு அமைப்பதற்கான அடித்தளம் போடப்பட்டுள்ளது. இப்பள்ளிவாசலின் வட்டவடிவமான தூண்கள் ஸ்பெயின் கட்டிடக் கலைத் தழுவலாக அடையாளம் காணப்பட்டுள்ளது. அவற்றுடன் சதுர வடிவமான தூண்களும் அவற்றின் தலைப்பாகம் எளிமையான அலங்கார வேலைப்பாடுகளுடன் காணப்படுவதும் நவீன கட்டிட கலையினையும் எடுத்துக்காட்டுகின்றது.நவீன கட்டிடக் கலையின் வடிவமாக

பார்க்கப்படும் இப்பள்ளிவாசல் இஸ்லாமியர்களின் பெருமைக்குரிய கட்டிடக்கலை வடிவங்களை தன்னகத்தே உள்வாங்கிக்கொண்டு வெள்ளை மாளிகையாய் களங்கமில்லா தூய்மையான கட்டிடமாக காட்சியளிக்கிறது. இப்பள்ளிவாசலில் காணப்படும் டொரிக் மரபினை ஒத்த தூண்கள் கிரேக்க கட்டிடக்கலையின் தூண்களை ஞாபகமூட்டுவதாய் அமைந்துள்ளது. 2 மாடிக் கட்டிடங்களிலும் மொத்தமாக 99 தூண்களும், ஜன்னல்களில் அல்லாஹ்வின் திருநாமங்கள் 99 உம் அரபு எழுத்தணிக்கலை வடிவங்களும் பொறிக்கப்பட்டுள்ளது. உட்புறத்தின் பாரிய பரப்பு கண்களை மின்னச் செய்கின்றன. இவற்றின் மிஹ்ராப் (தொழுகை நடத்தும் இடம்) மாபிள் கற்களாலும் அரபு எழுத்தணிக் கலையினாலும் வடிவமைக்கப்பட்டு தலை தூக்கிப் பார்க்கும் அளவிற்கு உயர்ந்தும், விரிந்தும் காட்சியளிக்கின்றது. இவற்றின் தரை அமைப்பு மாபிள் கற்களால் வடிவமைக்கப்பட்டு பள பளத்துக் கொண்டு ரசிகனின் பார்வையை நீடிக்கச் செய்கின்றது. 130*130 சதுர வடிவமான இப்பள்ளிவாசலின் ஒரு மாடியின் உயரம் 14 அடி ஆகும். அவற்றை சுற்றிவர குப்பா வடிவிலான ஜன்னல்களும் அவற்றில் அரபு எழுத்தணிக்கலைகளும் பார்வையாளனை கவர்ந்து நிற்கின்றன. .இப்பள்ளிவாசல் மத்திய கிழக்கு நாடுகளில் காணப்படும் பள்ளிவாசல் கட்டிடக்கலையினை சம்மாந்துறையில் காண்பிக்கின்றது. இதில் காணப்படும் ஜன்னல்களினதும், கதவுகளினதும் வடிவமானது குப்பா வடிவில் அமைக்கப்பட்டுள்ளதோடு இவற்றினைப் போன்று வளர்ச்சியடைந்த கதவு, ஜன்னல் அலங்காரங்களை சம்மாந்துறையின் ஏனைய பள்ளிவாசல்களில் காண முடியாது இப்பள்ளிவாசலின் தனிச் சிறப்பை எடுத்துக் காட்டுவதோடு, பள்ளிவாசலில் அழகினையும் ரசிகனின் உள்ளத்தையும் கொள்ளை கொள்ளச் செய்கின்றது. இவற்றின் கண்ணாடிகளில் அல்லாஹ்வின் அழகிய 99 திருநாமங்களையும் மக்கள் அறிய வேண்டும் என்ற உணர்வினை கலைஞர்கள் தனது கலையின் ஊடாக வெளிப்படுத்தியுள்ளனர்.

**சியாரங்களும் அவற்றின் அழகியல் வெளிப்பாடுகளும்**

சியாரம் என்பது இஸ்லாமிய ஆன்மிகப் பெரியார்கள், சூபிகள், வலிமார்கள், ஆட்சியாளர்கள் அவர்களின் அன்புக்குரியவர்கள் அல்லது இறைஞானிகள் அடக்கம் செய்யப்பட்ட, வாழ்ந்த, தரிசித்த இடங்களாகக் குறிப்பிடப்படுகிறது. இவற்றை மக்காம், தர்ஹா், தைக்கா், சேத்திரம்(கபுரடி), சமாதி என்றும் அழைக்கப்படுகின்றது. வலிமார்கள்(அவுலியாக்கள) உயிரோடு இருந்த காலங்களில் மக்களை நல்வழிப்படுத்தியதுடன், வைத்தியம் செய்தல், அற்புதங்களைச்(கராமத்) செய்து காட்டி மக்கள் மத்தியில் நன் மதிப்பைப் பெற்றிருந்தனர். அவுலியாக்கள் அவர்களுடைய இறை பக்தியின் காரணத்தினால் அல்லாஹ்வின் உதவியுடன் அற்புதங்களைச் செய்து மக்களிடம் செல்வாக்கு பெற்றிருந்தனர். அவர்கள் மரணமடைந்ததும்(மௌத்தானதும்) அவர்களை அடக்கம் செய்த இடங்களை சியாரங்களாகக் கொள்ளப்பட்டன. சியாரம் தெடர்பான பக்தர்களின் நம்பிக்கை எகிப்திய மக்களின் நம்பிக்கையினை எமக்கு ஞபகமூட்டுகின்றது. அவுலியாக்களின் சியாரங்களில் பக்தர்கள் கொண்டுள்ள அக்கறை காரணமாக அவை பல படிமுறை வளரச்சியினைக் கொண்டுள்ளன. அவுலியாக்கள் இறந்ததுடன் நல்லடக்கம் செய்யப்படும் சாதாரணமாக இஸ்லாம் கூறிய முறைப்படி கபூர் குழி(புதை குழி) வெட்டி அடக்கம் செய்யப்படும். இவை சாதாரண மணல் கும்பங்களாகக் காணப்படும். இவற்றுக்கு அடையாள வேலிகளும் கட்டப்பட்டுக் காணப்படும்.


ISBN 978-624-5736-14-0

அடக்கம் செய்த கபூர்களை பச்சைத் துணியினால் மூடி அவற்றினை பாதுகாக்கும் வழியினையும் மேற்கொண்டனர். இவ்வாறு மூடப்பட்டுக் காணப்படும் துணியில் அரபு எழுத்தணி அலங்கார வேலைப்பாடுகளும் காணப்படும். ஆடக்கஸ்தலங்களின் மேலால் கட்டிடங்களை நிர்மாணிப்பதை இஸ்லாம் அங்கீகரிக்கவில்லை. ஆதலால் கி.பி 10ம் நூற்றாண்டுவரை சமாதிகள் கட்டப்படவில்லை ஆயினும் கி.பி 16ம் நூற்றாண்டுகக்ப் பின் பாரசீகத்தில் சமாதிகள் கட்டும் மரபு ஆரம்பித்தது. 14ம் நுற்றாண்டு வரை அம்மரபு நீடித்தது. முன்னோர்களதும் ஞானிகளதும் அடக்கஸ்த்தலத்தின் மேல் சமாதிகளை நிர்மாணித்தனர். மன்னர்கள் தாம் உயிர் வாழும் போதே தமக்காக சமாதிகளை கட்டி வைத்தனர். ஞானிகள் இறந்த பின் அவரது பக்தர்கள் அவர்களின் அடக்கஸ் தலத்தின் மேல் சமாதிகளை நிர்மாணித்தனர். ‘‘கி.பி 1295 இல் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற கஸ்ஸான் எனும் ஆட்சியாளன் கட்டிட வரைபடக் கலைஞரும் நிர்மாணியும் ஆவார். தப்றீஸ் நகருக்கு மேற்கே அமைந்துள்ள செம்பு எனும் நகரை அவரே திட்டமிட்டு நிர்மாணித்தார். அந்நகரில் தனக்கானதான கற்பாறையில் உருவான ஒரு குப்பாவைக் கொண்ட ஒரு சமாதியும் நிர்மாணித்தார். இக்கட்டிடம் பன்னிரு பக்கங்களையும் கொண்டிருந்தது. அதற்கு ஒரு நிலவறையும் இருந்தது. உள்ளிருந்த அடக்கஸ்தலக் கட்டிடம் தங்க எழுத்துக்களால் அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. கஸ்ஸானுக்குப் பின் பதவியேற்ற உழ்ஜியாத் எனபவர் இஸ்லாத்தை ஏற்று முஹம்மது குதா பண்டா என்று பெயரை மாறறிக் கொண்டார். அவர் சுல்தானியா எனும் இடத்தில் ஒரு நகரை அமைத்தார். இந்நகர் அழிந்துள்ள போதும் அவர் அங்கு தனக்காக கட்டிய சமாதி இனனும் உள்ளது. மங்கோலிய ஆட்சிக்காலத்தில் நிர்மாணித்த சமாதிகள் மிக்க கவர்ச்சியானவை. கட்டிடக்கலை சின்னங்களாக அவை உள்ளன (பாசில், 2009).

இலங்கைக்கு முஸ்லிம் பெரியார்களின் வருகையே சியாரங்களின் தோற்றத்திற்கு காரணமாக அமைந்தது எனக் கொள்ளலாம். கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் மத்திய கிழக்குப் பகுதிகளில் இருந்தும் தென் இந்தியாவில் இருந்தும் வந்துள்ளனர் என்று வரலாற்று பதிவுகள் எமக்கு கோடிட்டுக் காட்டுகின்றன. பல இஸ்லாமிய பெரியார்கள் 8ம் நூற்றாண்டிலிருந்தே இலங்கைக்கு வருகை தந்திருந்தனர். இவர்கள் இஸ்லாமிய சமயப்பணிக்காகவும் ஆதம் (அலையை) தரிசிக்கவும், வியாபார நோக்காகவும் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார்கள் என்பது வரலாறு கண்ட உன்மை. இமாம் ஆபூ அப்துல் எனும் மதப் பெரியார் கி.பி 942இல் இந்தியாவிலிருந்து இங்கு வந்து மரணித்ததாகவும் அவருடைய சமாதியை பிரபல தேச சஞ்சாரி இப்னு பதுதா தரிசித்ததையும் மருதூர் ஏ.மஜித் தனது மத்திய கிழக்கில் இருந்து மட்டககளப்பு வரை எனும் நூலில் குறிபபிடுள்ளார் (நேர்காணல் 2).

**கலந்தார் சிக்கந்தர் அவுலியப்பா சியாரம்**

இச் சியாரம் சம்மாந்துறையின் மல்க்கம்பட்டி கிராமத்தில் அமைந்துள்ளது. நெய்னாக்காடு என்று அழைக்கப்படும் வீதியில் இச் சியாரம் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. இவ் வீதியானது ஆரம்பகால கண்டிக்கான பாதையாக காணப்பட்டது. ஆரம்பகாலத்தில் இலங்கைக்கு விஜயம் செய்த வெளிநாட்டவர்கள் தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக இப்பாதையை பயன்படுத்தினார்கள். இதில் அவுலியாக்களும் வருகை தந்தார்கள். அவ்வாறு மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து வந்த சிக்கந்தர் மக்களின் நன் மதிப்பினால் கலந்தரப்பா என்று

பெயர் சொல்லி அழைக்கப்பட்டார். மக்களுக்கு வைத்தியம் செய்தல்,நற்பண்புகளை கற்றுக்கொடுத்தல், அற்புதங்களைச் செய்து காட்டுதல் போன்ற செயல்களில் தன்னை ஈடுபடுத்தினார் ( நேர்காணல் 1).

இங்கு 5 அடக்கஸ்தலங்கள்( புதைக்கப்பட்ட இடம்) காணப்படுகின்றது. இவர்கள் கலந்தர் அப்பாவும் அவருடன் பணியாற்றிய, அவரிடமிருந்து ஆன்மீகத்தை கற்றெடுத்த அவரின் சீடர்களும் என்று நம்பப்படுகின்றது. இவர்கள் அனைத்து மதத்தவர்களினதும் நன்மதிப்பை பெற்ற இறைநேசர்களாக இன்று வரைக்கும் சில சாராரின் மதிப்புக்குரியவர்களாகவும், அவர்கள் உள்ளத்திலும் வாழ்ந்து கொண்டிருக்கிரார்கள். "கற்களை கொண்டு எளிய முறையில் ' எளிய வடிவில் கட்டி முடிக்கப்பட்டிருக்கும் இச் சியாரம் 1780 சதுர அடி பரப்பு கொண்டதும், உயரம் கட்டிடத்தின் வளை வரை 10 அடிகளும் மேல் வளை வரை 14 அடிகளும் கொண்டு காணப்படுகின்றது. மூன்று பக்கம் விறாந்தைகளும் கலந்தரப்பாவின் அடக்கஸ்தலத்தைக் கொண்ட உள் அறையும் காணப்படுகிறது. இவற்றில் பள்ளிவாசல் கட்டிடக்கலையின் மரபியல் வடிவமான குப்பா வடிவம் சுவரில் உட்கார்ந்தவாறு குதிரை லாட வடிவிலான வளைவு மாடம் காணப்படுகின்றது.மேலும் கலந்தரப்பாவின் சமாதி இருக்கும் அறையானது அரபு எழுத்தணிக்கலை பொறிக்கப்பட்ட துணி காணப்படுவதுடன்,இதன் மேல் இருக்கும் பச்சை துணியில் மொசைக் வேலைப்பாடுகளும் கலைநயத்துடன் காட்சியளிக்கின்றன. மேலும் சியாரம் இருக்கும் காணியில் மேலும் சில அவுலியாக்கள் அடக்கப்பட்டதாகவும் அவற்றின் அடையாளங்கள் மறைந்துவிட்டதாகவும் தகவல் கிடைக்கப் பெற்றுள்ளது. அதனோடு கலந்தர் சிக்கந்தர் அப்பாவின் சியாரத்திற்குத்திற்கு மேற்குப்புறமாக காணப்படும் காட்டுப்பக்கிர் அப்பாவின் சியாரமும் மிக எளிமையான வடிவில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. அவற்றில் மிகச் சிறிய குப்பா வடிவிலான காற்றோட்டைகள் இரண்டும் காணப்படுகின்றன.இச் சியாரம் அமைந்துள்ள காணியில் ஆலிம் மர்வானுல், பாத்திமா அஸ்ஸாலி போன்ற இறைநேசர்களும் அவர்களின் அடக்கஸ்தலங்களும் காணப்படுகின்றன. இச் சியாரங்கள் காணப்படும் எல்லைப் பகுதியில் தொழுகைக்கான பள்ளிவாசல் ஒன்றும் காணப்படுவதனுடன் மிக எளிமையான இஸ்லாமியக்கலை வெளிப்பாடுகளையே கண்டு கொள்ளக்கூடியதாக உள்ளது. மல்கம்பிட்டியில் அமைந்திருக்கும் இச் சியாரங்களின் நுழைவாயில் கட்டிடக்கலையில் மினாராவின் தோற்றம் மிக அழகாக காட்சியளிக்கின்றது.

மேற்கண்டவாறு காணப்படும் இச் சியாரத்தின் நுழைவாயில் பள்ளிவாசல்களின் கட்டடக்கலை மரபினை பின்பற்றியதாய் வடிவமைக்கப்பட்டுள்ளது.எண் கோண வடிவிலான நான்கு தூண்களின் மேலும் மினாராவை பிரதிபலிக்கும் 4 வட்டாக்களும் காணப்படுகின்றன. மேலும் அவற்றின் மேல் உருளை வடிவிலான கும்மட்டமும் அழகுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவற்றின் இடது புறம் இருக்கும் இரு தூண்களுக்கும் இடையில் சிறிய கூர்நுனிப்பாகமும் அவற்றின் கீழ் உள்ள சுவர்களில் குப்பாவை பிரதிபலிக்கும் வண்ணம் 4 காற்றோட்டைகளும் மிகச் சரியான திட்டமிடலின்படி கட்டிட கலைஞன் மேற்கொண்டுள்ளான். மேலும் இவற்றின் நுழைவாயில்களில் காணப்படும் கதவு நுழைவாயிலோடு கட்டப்பட்டிருக்கும் மதில்சுவர் என்பவற்றில் இஸ்லாமிய கட்டிடக்கலை வடிவங்கள் காட்சியளித்துக் கொண்டிருக்கிறன. கீழே காணப்படும் கட்டிட அமைப்பு ஆரம்பகாலத்தில் சியாரம் இருக்கும் இடத்தை கண்டு

கொள்வதற்காகவும், பக்தர்களின் வருகை அதிகரிக்க செய்யவும் பயன்படுத்தப்பட்ட ஒருவகை தொடர்பாடல் குறியீடாகவே பயன்படுத்தப்பட்டது. இவற்றில் அழகியலை உருவாக்கிய கலைஞனின் தொழில்நுட்ப அறிவும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும். செவ்வக வடிவிலான நான்கு சுவர் பரப்புகளை தூண் வடிவில் இணைத்து அவற்றின்மேல் பிரமிட் வடிவத்தினை பிரதிபலிக்கும் வகையில் படிக்கட்டு அமைத்து சுவருக்குள் குடைந்தவாறு துளையிட்டு விளக்கு(தீ) எரியவைத்து அடையாளம் காட்டப்பட்டது. இத் தீச்சுடர் மழையினால் பாதுகாக்கப்பட வேண்டுமென்பதற்காக மேலே கூரை அமைக்கும் தொழில்நுட்ப அறிவும் அக்கலைஞனிடம் காணப்பட்டுள்ளது. இவ்வாறு கட்டிட சமிச்ஞை விளக்கின் கூரை அழிந்து சென்றாலும் பழமை பாதுகாக்கப்பட வேண்டுமென்பதற்காக அவற்றில் அண்மைக்காலத்தில் எளிமையான கூரை வடிவமைப்பை மக்கள் செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**குறுந்தடியப்பா சியாரம்**

கண்டிக்கால வீதிகளில் ஒன்றில் அமைந்திருக்கும் இச் சியாரம் குருந்தை மரங்களை உள்ளடக்கிய அழகிய வயற் காட்சிகளின் நடுவில் அமைதியாய் காட்சி அளிக்கின்றது. சம்மாந்துறையின் வயல் காணிகளில் ஒன்றான குடா வட்டை என்று அழைக்கப்படும் பிரதேசத்தில் அமைந்திருக்கும் இச் ஸியாரம் பக்தர்களின் மன அமைதியின் இல்லமாக காணப்படுகின்றது. விவசாயிகளின் ஓய்வெடுக்கும் அழகிய இடமாகவும் இச் சியாரம் காணப்படுகிறது. இது மிகச் சிறிய கட்டிடம் ஆகவும் மரத்தின் முன் மண்டபம் காணப்படுகின்றது. இருக்கும் சுவரில் குப்ப வடிவம் குடையப்பட்டு இஸ்லாமிய கலை மரபினை வெளிக்காட்டுகின்றது (ரமீஸ் அப்துல்லாஹ், 2019).

இதன் மொத்த பரப்பு 115 சதுர அடி ,சுற்றி வர 15 சதுர வடிவான தூண்களும் சுவருடன் ஒட்டி அமைக்கப்பட்டிருக்கின்றன. பச்சைக் கட்டிடமாக காட்சியளிக்கும் இந்த சியாரத்தின் வடக்குப் புறத்தில் கொடிக்கம்பம் ஒன்றும் காணப்படுகின்றது. விசேட நாட்களில் அதில் கொடியேற்றி பக்தர்கள் கொண்டாடும் பழக்கமும் காணப்பட்டதுடன்; கந்தூரி கொடுத்தல், சியாரத்தை தரிசித்தல் போன்ற செயல்களிலும் பக்தர்கள் ஈடுபட்டனர்.

**காட்டவுலியப்பா சியாரம்**

இந்த சியாரம் சம்மாந்துறையில் சேனை வட்ட கண்டத்தில் அமைந்துள்ளது. இவரது உண்மையான பெயர், எங்கிருந்து வந்தார் என்பதை அறிந்துகொள்ள முடியவில்லை. இவரது அடக்கஸ்தலத்தை சுற்றி வயல் நிலங்கள் காணப்பட்டாலும் ஒரு மேட்டு நிலத்தில் அடர்ந்த காட்டுப் பகுதியில் இவர் தனியாக தவம் செய்து வந்துள்ளார். எவ்வளவு காலம், இவ்வாறு உணவு, உறக்கமின்றி இருந்தார் என்பது இறைவனுக்கு மாத்திரமே தெரியும். இவ்வாறு காட்டில் தவத்தில் இருப்பது மக்களால் அறியப்பட்டது. இதன் பிற்பாடு அக்காடு துப்பரவு செய்யப்பட்டு அவருக்காக குடிசை அமைக்கப்பட்டு மக்கள் அவரை காட்டவுலியப்பா என்று அழைத்து வந்தனர் .இன்று அழிவுற்றுக் கொண்டிருக்கும் இந்த சியாரம் ஒரு காலத்தில் மக்களின் நன்மதிப்பைப் பெற்ற சியரமாக இருந்தபோதிலும் இன்று இது அழிவடைந்து கொண்டிருக்கின்றது. சம்மாந்துறையின் பாரம்பரிய சொத்துக்களில் ஒன்றான இவ்வழகிய


ISBN 978-624-5736-14-0

கட்டிடம் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நல்லெண்ணம் கொண்ட ஒரு சாரார் இவற்றுக்கு அண்மையில் பள்ளிவாயல் கட்டிடக்கலை பிரதிபலிக்கும் வண்ணம் உறுதியான கட்டிடம் கட்டும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். இவை எதிர் காலத்தில் முஸ்லிம்களின் வணக்க ஸ்தலமாக பயன்படுத்தப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. 900 சதுர அடிப் பரப்பைக் கொண்ட காட்டவுலியபா சியாரத்தின் உட்புறத்தில் அவுலியாக்களின் வெற்றிக் கொடிகளும்,பிறை வடிவமும் சீமெந்து(சாந்து) கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளன. மிக எளிமையாகக் காணப்படும் இச் சியாரம் அவுலியாவின் நினைவுச் சின்னமாக கருதப்படுகின்றது.இங்கு அடக்கம் செய்யப்பட்டிருக்கும் காட்டவுலியப்பாவின் சமாதியை போர்த்தி வைத்திருக்கும் பச்சை துணியில் மொசைக் அலங்கார வேலைப்பாடுகள் காட்சியளிக்கின்றன.இவ்வாறு கட்டப்பட்டுக் காணப்படும் இந்த சியாரங்களை மக்கள் தரிசிக்கின்றதுடன் பல நம்பிக்கைகளையும் கொண்டுள்ளனர். இறந்தவர்களிடம் பிரார்த்தனை செய்தால் அவர்கள் அல்லாஹ்விடத்தில் தமது தேவைகளை எத்தி வைப்பார்கள் என்ற நம்பிக்கையில் ஒரு சாராரை கபூர் வணக்கத்திற்கு இட்டுச் சென்றுள்ளது. அவுலியாக்கள் உயிருடன் இருந்தபோது செய்த அற்புதங்களும் மக்களுக்கு செய்த உதவிகளும் மக்கள் மனதில் வேரூன்றியது. இறந்தவர்கள் எப்போதும் நம்மிடம் இருந்து கொண்டிருக்கின்றார்கள்: அவர்களின் ஆத்மா உலகில் ஊசலாடிக் கொண்டிருக்கிறது. ஆத்மாவுக்கு அழிவு கிடையாது. நிச்சயமாக எங்கள் தேவைகளை பூர்த்திசெய்யகிறது. என்ற பூரண நம்பிக்கை கொண்ட ஒரு சாரார் பாரம்பரிய சொத்துக்களையும், வணக்கஸ்தலங்களையும் பாதுகாக்க வேண்டுமென்ற எண்ணம் கொண்டவர்களினால் ஸியாரங்கள் இன்று வரைக்கும் பாதுகாக்கப்பட்டு வருகின்றது.வெளிநாடுகளில் கட்டப்பட்டிருக்கும் சியாரங்கள் சில மன்னர்களினதும் அவர்களின் அன்பை பெற்று கொண்டவர்களினதும் ஸியாரங்கள் ஆகும். இவற்றிற்கு உதாரணமாக ஷாஜகான் தனது காதலிக்கு கட்டிய தாஜ்மஹாலை கூறலாம். ஆனால் சம்மாந்துறை பிரதேசத்தில் அடையாளம் காணப்பட்ட அனைத்து சியாரங்களிலும் காணப்படும் எல்லா சமாதிகளும் இறைநேசர்களின் சியாரங்கள் ஆகும். இவற்றில் மக்கள் கொடியேற்றி கந்தூரி (சமைத்த உணவு அல்லது அன்னதானம்) கொடுத்து இந்துக்களும் முஸ்லிம்களும் கலந்து ஒற்றுமையாக வழிபட்ட தலங்களாக பார்க்கப்படுகின்றது.

முடிவுரை

மனித வளர்ச்சியுடன் இணைந்து அவனது பண்பாட்டு விழுமியங்களும் வளர்ச்சி கண்டன. மனிதன் பண்பாட்டு விழுமியங்கள், அமைவிடம், கலாச்சாரம் என்பவற்றுடன் பின்னிப்பிணைந்துள்ளான். இவற்றை அடிப்படையாகக் கொண்டே சம்மாந்துறை முஸ்லிம் மக்களின் பண்பாட்டு விழுமியங்கள் காணப்படுகின்றது. இவ்வாறு மனிதப்பண்பாடுக்ளுடன் இணைந்தவாறே மனிதனின் கலை உணர்ச்சிகள் வெளிப்படுகின்றன.உலகில் உள்ள மனிதர்களின் உணர்வுகளை வெளிக்கொணடுவரும் ஆற்றல் நுண்கலைகளுக்கு உண்டு. இவ்வாறான நுண்கலைகளில் முஸ்லிம்களும் குறிப்பிடத்தக்க பங்கினை ஆற்றுகின்றனர். இவற்றினை பயன்படுத்தும் ஒவ்வொரு முஸ்லிமும் சில அடிப்படை விதிகளை கடைப்பிடித்து தனது அழகியல் உணர்வனை வெளிக் கொண்டு வர வேண்டும். அந்த வகையில் ஓவியக்கலை, கட்டடிடக்கலை உட்பட ஏனைய நுண்கலைகளிலும் ஒரு முஸ்லிம் தனது ஆற்றலை வெளிப்படுத்துகின்றான் என்பதை இவ்வாய்வு முன்வைத்துள்ளது.இஸ்லாம்


ISBN 978-624-5736-14-0

வளர்த்த கலைகளில் பள்ளிவாயல் கட்டிடக்கலைகளும் சியாரங்களின் கட்டிடக்கலைகளும் குறிப்பிட்டுச் சொல்லும் விடயங்களாகும். இவற்றில் இஸ்லாத்திற்கு முன்பும் இஸ்லாத்திற்கு பின்பும் முஸ்லிம்களுக்கென்ற ஒரு கட்டிடக்கலை மரபை இஸ்லாம் சொல்லவில்லை. அவை பிற்பட்ட காலங்களில் ஆட்சிக்கு வந்த உமையாக்கள், அப்பாசியர்களினால் பிற கலாசாரத் தழுவல்களுடன் இஸ்லாமியர்களுக்கென்ற பள்ளிவாயல்கள் சியாரங்கள உருவானது என்ற விடயத்தை இவ்வாய்வு கற்றுத்தந்தது. இவ்வாய்வின் தலைப்பிற்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட ஆராய்சி ஆய்வாளர்களுக்கு தீர்வினை கொடுக்கும் முகமாக இவ்வாய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

**உசாத்துணை நூல்கள்**

அமீன், எம்.ஐ.எம். (2008). முஸ்லிம்கள் வளர்த்த அறிவியல் அழகியல் கலைகள். அல் ஹசனாத் பதிப்பகம: ஹெம்மாதக்கம.

அப்துல் றாசீக், எஸ். (2012). முஸ்லிம் மத்தியில் குடி வழிமுறை: சம்மாந்துறை.

றமீஸ் அப்துல்லாஹ், (2019). சம்மாந்துறை வரலாறும் வாழ்வியலும்: சம்மாந்துறை வெளியீட்டுப்பணியகம்.

அனஸ், எம்.எஸ்.எம். (2007). இலங்கையில் முஸ்லீம் நுண்கலை. கொழும்பு: குமரன் புத்தக இல்லம்.

உஸ்மா சாஹித், (2001). மஸ்ஜிதுல் அக்சாவும் பாபரி மஸ்ஜிதும். கலீலுல்றஹ்மான் பதிப்பகம்: கல்முனை.

முஹம்மது அக்ரம். (2013). நடைமுறைக்கேற்ற இஸ்லாம்(பகுதி 02). இஸ்ஸலாமிக் புக் ஹவுஸ்: கெழும்பு.

சாக்கீர், எம்.ஐ.எம். (2012). சம்மாந்துறை பெயர் வரலாறு. வாழும் கலை இலக்கிய வட்டம்: சம்மாந்துறை.

பாஸில், எம். (2009). இறைநேசர்களின் கப்றுக்களை முத்தமிடலாமா!. ஜம்மியத் இசாஅத் அஹ்லுஸ்ஸுன்னா: கெழும்பு-11.

ஏறாவூர் வரலாறு. (2005). ஏறாவூர் வரலாற்று ஆய்வு மையம்: ஏறாவுர்.

**சஞ்சிகைகள்**

பிரதேச செயலகம். (2012). பட்டறை பிரதேச சாஹித்திய கலாசார பெருவிழா. பிரதேச செயலகம் சம்மாந்துறை.


ISBN 978-624-5736-14-0